# அறிவிப்பு

02.05.2024
கரூர்.

மாண்புமிகு தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் வழிகாட்டுதல் படி, கரூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவானது தன்னார்வ சட்டப்பணியாளராக சேவை புரிய விருப்பமுள்ள உள்ளூர் குடியிருப்போர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. கரூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் குளித்தலை, அரவக்குறிச்சி ஆகிய வட்ட சட்டப்பணிகள் குழுவிற்கு தன்னார்வ சட்டப்பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். மேற்படி தன்னார்வ சட்டப்பணியாளருக்கான கடமை சேவை மட்டுமே, இது நிரந்தர பணிக்கானது அல்ல முற்றிலும் தற்காலிகமானது மற்றும் அதற்கு அடிப்படை சம்பளம் அல்லது ஊதியம் எதுவும் இல்லை, சேவைக்கு தகுந்த கௌரவ ஊதியம் மட்டுமே அளிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

1. ஆசிரியர்கள் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட)
2. ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்த குடிமக்கள்
3. சமூகப் பணியில் முதுநிலைக் கல்வி (M.S.W.) பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்
4. அங்கன்வாடி பணியாளர்கள்
5. மருத்துவர்கள்/உடல்நல நிபுணர்கள்
6. மாணவர்கள் மற்றும் சட்ட மாணவர்கள் (அவர்கள் வழக்கறிஞராகப் பதிவு செய்யும் வரை)
7. அரசியல் சார்பற்ற அரசு சாரா சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் சங்கப் பிரமுகர்கள்
8. மகளிர் குழுக்கள், மைத்ரி சங்கங்கள் மற்றும் வறியோரை உள்ளடக்கிய சுய உதவிக்குழுக்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள்
9. மாவட்ட/வட்ட சட்டப்பணிகள் குழுவிற்கு விண்ணப்பிக்க தகுதியுடைய சேவை மனப்பான்மை உள்ளவர்கள்

மேற்கூறிய வகைகளின் கீழ் வருபவர்களில் பொதுமக்களுக்கு சேவை செய்ய ஆர்வமுள்ளவர்கள் வருகின்ற 17.05.2024 மாலை 5.00 மணிக்குள் நேரிலோ அல்லது பதிவு தபால் வழியாகவோ விண்ணப்பிக்கலாம்.

- விண்ணப்பத்தினை கரூர் மாவட்ட நீதிமன்றத்தின் பின்வரும் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளவும்.

**https://karur.dcourts.gov.in**

- நேர்காணல் தேதி, இடம் மற்றும் இதர விபரங்கங்களை விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்டுள்ள கரூர் மாவட்ட நீதிமன்றத்தின் இணையதளத்தின் மூலமாக தெரிந்து கொள்ளலாம். விண்ணப்பதாரர்களுக்கு தபால், குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலமாக எந்தவொரு தகவலும் தெரிவிக்கப்பட மாட்டாது.

பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் வருகின்ற 17.05.2024 மாலை 5.00 மணிக்குள் வந்து சேர வேண்டிய முகவரி:

தலைவர்/மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
ADR கட்டிடம், பழைய நீதிமன்ற வளாகம்,
5 ரோடு, கரூர் - 639 001.

**Sd/-M.Backiam,**
**Secretary/Sub Judge,**
**District Legal Services Authority,**
**Karur.**

**Sd/-R.Shanmugasundaram,**
**Chairman/ District Judge,**
**District Legal Services Authority,**
**Karur.**

| விண்ணப்பதாரர் புகைப்படம் சுய சான்றொப்பம் இடவும் |
|---|

# மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, கரூர்

## தன்னார்வ சட்டப்பணியாளர்களுக்கான விண்ணப்ப படிவம்

| | | | |
|---|---|---|---|
| 1 | விண்ணப்பதாரரின் பெயர் | : | |
| 2 | தகப்பனார்/கணவர் பெயர் | : | |
| 3 | பிறந்த தேதி மற்றும் வயது | : | |
| 4 | பாலினம் | : | |
| 5 | கல்வி மற்றும் தொழில் நுட்பத் தகுதி | : | |
| 6 | நிரந்தர முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி | : | |
| 7 | காவல்துறையில் வழக்கு எதுவும் நிலுவையில் இருந்தால்? அதன் விவரம் | : | |
| 8 | இதற்கு முன் தன்னார்வ சட்டப்பணியாளராக சேவை செய்த அனுபவம் உள்ளதா?<br>ஆம் எனில் அதன் விவரம்<br><br>(வேறு ஏதாவது சேவை அனுபவம் இருந்தால் அதன் விவரம்) | : | |
| 9 | தன்னார்வ சட்டப்பணியாளராக சேவை/பணி புரிய விருப்பமுள்ள இடம் | : | கரூர்/குளித்தலை/அரவக்குறிச்சி |

தன்னார்வ சட்டப்பணியாளருக்கான கடமை சேவை மட்டுமே, உத்தியோகம் இல்லை, இந்த பணி முற்றிலும் தற்காலிகமானது மற்றும் அதற்கு அடிப்படை ஊதியம் எதுவும் இல்லை. சேவைக்கு தகுந்த கௌரவ ஊதியம் மட்டுமே அளிக்கப்படும் என்பதை நான் தெரிந்து கொண்டேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்